**செ.வெ.எண் :642** **நாள்: 02.10.2021**

**தஞ்சாவூர் மாவட்டத்திற்கு இந்தாண்டு கதர் விற்பனை குறியீடு ரூ.77.70 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது-மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

தஞ்சாவூர் மாவட்டம் பூமாலை வணிக வளாகத்தில் காந்தியடிகளின் 153-வது பிறந்தநாள் விழா மற்றும் தீபாவளி சிறப்பு விற்பனை துவக்கவிழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.10.2021) குத்துவிளக்கேற்றி, துவக்கி வைத்து பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் காந்தியடிகளின் 153-வது பிறந்த நாள் விழா மற்றும் தீபாவளி சிறப்பு விற்பனை துவக்க விழா நமது மாவட்டத்தில் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு நமது மாவட்டத்திற்கு கதர் விற்பனை குறியீடாக சென்ற ஆண்டு ரூ.77.70 லட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 80மூ எய்தப்பட்டுள்ளது. அதேபோன்று இந்த ஆண்டு ரூ.77.70 லட்சம் விற்பனை குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இச்சிறப்பு விற்பனைக்கு 30 சதவீதம் சிறப்பு தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறது மேலும் பாரத பிரதமரின் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் வங்கிக் மூலமாக கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது தமிழக அரசு மண்பாண்ட தொழிலாளர்களுக்கு மழைக்கால நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது எனவே அரசு ஊழியர்களும் பொதுமக்களும் கதர் ஆடைகளை வாங்கி தீபாவளியை மகிழ்வுடன் கொண்டாட வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செய்து தீபாவளி சிறப்பு முதல் விற்பனையை துவக்கி வைத்தார்.

இவ்விழாவில், உதவி இயக்குனர் அலுவலக கண்காணிப்பாளர் திருமதி.பிரான்சிஸ் தெரசா மேரி, கதர் ஆய்வாளர் சிவக்குமார் காதிகிராப்ட் மேலாளர் திருமதி ஜீ சாவித்திரி மற்றும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**